4. கவன ஈர்ப்பு

திருச்சுழி தொகுதி, உண்டுருமி கிடாகுளம், ராம்கி எனர்ஜி & என்விரான்மென்ட் நிறுவனத்தால் வெளியேற்றப்படும் மருத்துவக் கழிவுகளால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சுழி தொகுதி, உண்டுருமிகிடாகுளம், ராம்கி எனர்ஜி மற்றும் என்விரான்மென்ட் லிமிடெட் நிறுவனத்தால் வெளியேற்றப்படும் மருத்துவக் கழிவுகளால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களில் எல்லாம் வல்ல இறைவனுடைய அருளால் நலமுடன் வந்து, சபையை நடத்துவதற்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி.*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: *நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவையின்முன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

 [திரு. கே.சி. கருப்பணன்]

அறிக்கை

மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள், 2016–ஐ மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகம் அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகள் மருத்துவக் கழிவுகளை உற்பத்தி செய்வோர் மற்றும் கையாளுவோர் அனைவருக்கும் பொருந்தும். மருத்துவக் கழிவுகளைப் பாதுகாப்பான முறையில் சேகரித்து சுத்திகரிப்பு செய்து அகற்றுவது, மருத்துவக் கழிவுகளை உற்பத்தி செய்வோர் மற்றும் பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குவோர்களின் பொறுப்பாகும். மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகளை அனைத்து மருத்துவமனைகளும் சரிவர பின்பற்றுகின்றனவா என்பதை உறுதி செய்வது மாநில அரசு சுகாதாரத் துறையின் பொறுப்பாகும். மருத்துவமனைகள் மற்றும் பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அங்கீகாரம் வழங்கி, அந்நிறுவனங்கள் விதிகளைச் சரிவர கடைப்பிடிக்கின்றனவா என்பதை கண்காணிக்கும் பொறுப்பு மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தைச் சார்ந்ததாகும்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இவ்விதிகளின்கீழ் இதுவரை 3,720 படுக்கை வசதி கொண்ட தனியார் மருத்துவமனைகள், 368 படுக்கை வசதி கொண்ட அரசு மருத்துவமனைகள் மற்றும் 573 படுக்கை வசதியில்லாத மருத்துவமனைகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அனைத்து மருத்துவமனைகளும் மருத்துவக் கழிவுகளைச் சேகரித்தல், கொண்டு செல்லுதல், சுத்திகரிப்பு செய்தல் மற்றும் விஞ்ஞான முறைப்படி அகற்றுதல் பொருட்டு, பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளன. தமிழ்நாட்டில் 11 பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. இவற்றில் நாளொன்றுக்கு 43 டன் மருத்துவக் கழிவுகள் கையாளப்படுகின்றன. மேலும் 3 பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் திருவள்ளூர், கடலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

மருத்துவமனைகளிலிருந்து வெளியேறும் மருத்துவக் கழிவுகளை விஞ்ஞான முறையில் சுத்திகரிப்பு செய்து வெளியேற்றுவதற்காக நிறுவப்பட்ட திருவாளர் ராம்கி எனர்ஜி & என்விரான்மென்ட் லிமிடெட் நிறுவனமானது விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டத்தில் உள்ள உண்டுருமிகிடாகுளம் கிராமத்தில் அமைந்துள்ளது. இந்நிறுவனம் 2006 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் மாதம் ஒன்றுக்கு சுமார் 120 டன் மருத்துவக் கழிவுகளைக் கையாளும் திறன் கொண்டுள்ளது.

இந்நிறுவனத்தில் மதுரை, தேனி, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள அனைத்து (தனியார் மற்றும் அரசு) மருத்துவமனைகளிலிருந்தும் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் அரசு மருத்துவமனைகளிலிருந்தும் வெளியேறும் மருத்துவக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு, விஞ்ஞான ரீதியில் சுத்திகரிக்கப்பட்டு, வெளியேற்றப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்தில், சுமார் 652 தனியார் மருத்துவமனைகள் மற்றும் 76 அரசு மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிலையங்களிலிருந்து வெளியேறும் மருத்துவக் கழிவுகள் சுத்திகரிக்கப்பட்டு, வெளியேற்றப்பட்டு வருகின்றன. இந்த நிறுவனத்திற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இசைவாணையானது 30–6–2017 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இப்பகுதியில் உள்ள கிராமங்களிலிருந்து பொது மக்கள் காற்று மாசு ஏற்படுவதாகவும், சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் முன்னர் புகார்கள் அளித்து வந்தனர். தற்போது புகார் மீண்டும் பெறப்பட்டுள்ளது.

அதன் வீரியத்தை கருத்தில்கொண்டு, பொது மக்களிடையே இருமுறை அமைதிக் கூட்டம், வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை அவர்களால் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின்பேரில் நடத்தப்பட்டது.

அப்பொழுது, பொது மக்களிடையே சுகாதார ஆய்வு மேற்கொள்ள அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும், இதன் அருகிலுள்ள திருவாளர் தமிழ்நாடு வேஸ்ட் மேனேஜ்மென்ட் லிமிடெட் என்ற மற்றொரு நிறுவனமும் செயல்படக்கூடாது என்று தெரிவித்தனர்.

மேலும், 16–5–2017 அன்று இணை இயக்குநர் (சுகாதாரம்) அவர்கள் அ.முக்குளம் கிராமத்தில் நடத்திய சுகாதார ஆய்விலும் மக்கள் கலந்து கொள்ளவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன், விருதுநகர் மாவட்டம், திருச்சுழி தொகுதி, உண்டுருமிகிடாகுளம் கிராமத்தில் இயங்கி வரக்கூடிய இந்த ராம்கி எனர்ஜி மற்றும் என்விரான்மென்ட் லிமிடெட் நிறுவனமானது மருத்துவக் கழிவுகளைப் பல்வேறு மருத்துவமனைகளிலிருந்து பெற்று எரிக்கக்கூடிய நிறுவனம். தேனி,

மதுரை உள்ளிட்ட ஏறத்தாழ ஐந்து மாவட்டங்களில் இருக்கக்கூடிய அரசு மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைகளிலிருந்து பெறக்கூடிய மருத்துவக் கழிவுகள் மற்றும் கழிக்கப்படக்கூடிய மனித உறுப்புகளை எரிக்கக்கூடிய இந்த நிறுவனத்தின் மூலமாக என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய ஏறத்தாழ 30, 40-க்கும் மேற்பட்ட கிராமங்களிலே இன்றைக்கு மிகப்பெரிய பாதிப்புகள் உருவாகியிருக்கின்றன. நிலத்தடி நீரும், வேளாண்மையும் பெருமளவிலே பாதிக்கப்பட்டிருக்கின்றன. மனித உயிர்களுக்கும், கால்நடைகளுக்கும் பெரும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டிருக்கின்றன. சில இடங்களிலே மனித உயிரிழப்புகள்கூட நேர்ந்திருக்கின்றன. இந்த நிறுவனமானது மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தினுடைய சட்டவிதிகளின்படி நீர்நிலைகளிலிருந்து 500 மீட்டர் தொலைவிலே அமைக்கப்படாமல், அதற்குள்ளாகவே இயங்கக்கூடிய ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 2013 ஆம் ஆண்டிலேயே விரிவான ஓர் ஆய்வினைச் செய்து, அதை மூடுவதற்காக அன்றைக்கே உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, இப்போது மீண்டும் ஒரு சுகாதார ஆய்வினை மேற்கொள்ள வேண்டியதில்லை என்பது அங்கே இருக்கக்கூடிய பொது மக்களுடைய கருத்தாக இருக்கிறது. எனவே, இதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய பதற்ற நிலையைக் கருத்திலே கொண்டு, அந்த ஆலையை நிரந்தரமாக மூடி, அங்கே இருக்கக்கூடிய மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், உண்டுருமிகிடாகுளம் கிராமத்தில் 2006 ஆம் ஆண்டு முதல் மருத்துவக் கழிவுகளைச் சுத்திகரிப்பு செய்து வெளியேற்றும் ராம்கி எனர்ஜி மற்றும் என்விரான்மென்ட் லிமிடெட் நிறுவனம் பொது மக்களிடையே கேட்புணர்வுக் கூட்டம் நடத்தி, சுற்றுச்சூழல் துறையின் அனுமதி பெற்று, பின்னர்,* Indian Institute of Technology, Chennai *அவர்கள்மூலம் கட்டுமானப் பணிகள் ஆய்வு செய்யப்பட்டு, இந்த நிறுவனம் செயல்படலாம் என்ற உறுதிமொழியை அவர்கள் வழங்கிய பின்னர், இசைவாணை வழங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றது.*

[திரு. கே.சி. கருப்பணன்] [2017 ஜூலை 6

இந்த நிறுவனம் மதுரை, தேனி, வரிதுநகர், திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 652 தனியார் மருத்துவமனைகள், 76 அரசு மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் மருத்துவக் கழிவுகளை நாள் ஒன்றிற்கு 43 டன் அளவிற்கு விஞ்ஞான முறைப்படி சுத்திகரிப்பு செய்து வருகின்றது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் இந்நிறுவனத்திற்கு 30–6–2017 வரை இசைவாணை புதுப்பித்து வழங்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11–30

இருப்பினும், இந்தப் பகுதியிலுள்ள கிராமங்களில் காற்று மாசுபடுவதாகவும், சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதாகவும் பொது மக்கள் சார்பில் புகார் அளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், காற்று மற்றும் தண்ணீரின் தரம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய ஆய்வகம்மூலம் ஆய்வு செய்யப்பட்டு, அதன் வழி அலகுகள் அனைத்தும் வாரியம் நிர்ணயித்த அளவிற்குள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இந்த நிறுவனத்தின் தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் புகை, புகைவடிப்பான்மூலம் வடிக்கப்பட்டு வருகிறது. பின்னரும், இதன் வீரியத்தைக் கருத்தில் கொண்டு, பொது மக்களுடன், அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அவர்களால், மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரில் இரண்டு முறை அமைதிக் கூட்டம் நடத்தப்பட்டது. அப்போது பொது மக்களிடையே சுகாதார ஆய்வு நடத்த பொது மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

மேலும், இந்த நிறுவனத்திற்கு அருகில் மற்றொரு நிறுவனமான Tamilnadu Waste Management Limited என்ற நிறுவனமும் அங்கு செயல்படக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும், 16–5–2014 அன்று இணை இயக்குநர் (சுகாதாரம்) அவர்கள் அந்தக் கிராமத்தில் நடத்திய சுகாதார ஆய்விலும் மக்கள் கலந்துகொள்ளவில்லை. பொது மக்களின் தொடர் எதிர்ப்பினால் மேற்படி இரண்டு நிறுவனங்களும் மே மாதம் முதல் வாரத்திலிருந்து மூடப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிறுவனங்களையும் காவல் துறை உதவியுடன் செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்தார்கள். அதற்கும் பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினால், இந்த நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலைகளை நடத்துவதற்கு காவல் துறையின்

2017 ஜூலை 6] [திரு. கே.சி. கருப்பணன்]

பாதுகாப்பு கோரி, மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் ஜூன், 2017–ல் வழக்கு தொடர்ந்துள்ளன. இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. இதன்மீது தீர்ப்பு பெற்ற பின்னர், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பிரச்சினை என்னவென்றால், ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருந்த நிறுவனத்தினால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கக்கூடிய நிலையில், இன்னொரு நிறுவனமான Tamilnadu Waste Management Limited என்ற பெயரிலே புதிய நிறுவனம் அங்கு உருவாகி, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய இடங்களிலிருந்து e–wastes என்று சொல்லக்கூடிய அனைத்துக் கழிவுகளையும் இங்கு வந்து புதைக்கக்கூடிய நிலையும் அங்கு இருக்கிறது. திருச்சுழி பகுதி விவசாய நிலங்கள், வேளாண் நிலங்களைச் சார்ந்திருக்கக்கூடிய பகுதி. ஊரில் இருக்கக்கூடிய அனைத்து மருத்துவக் கழிவுகள், e–wastes என்று எல்லாவற்றையும் இங்கு வந்து புதைக்கக்கூடிய கிட்டங்கியாக இந்தப் பகுதி மாறக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால்தான், மக்கள் அதனைக் கடுமையாக எதிர்க்கிறார்கள். இதை எதிர்த்துதான், அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அமைதி பேச்சுவார்த்தையிலிருந்துகூட அன்றைக்கு அவர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். தவிர, இன்றைக்கு காவல் துறையின் உதவியோடு அந்த நிறுவனங்களை நடத்த வேண்டுமென்ற மாவட்ட ஆட்சித் தலைவருடைய உத்தரவானது அங்கிருக்கக்கூடிய பொது மக்களின் உணர்வுகளைப் புண்படுத்துவதாக இருக்கிறது. மக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மாவட்ட நிருவாகத்திற்கும், இந்த அரசுக்கும் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்த அரசும் உடனடியாக இந்தப் பிரச்சினையில் அக்கறை எடுத்துக்கொண்டு, பொது மக்களுக்கு பெரும் இடையூறை ஏற்படுத்தி, மக்களின் உயிருக்கும், வேளாண்மைக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கக்கூடிய இந்த இரண்டு நிறுவனங்களையும் தடுத்து நிறுத்த வேண்டும். Tamilnadu Waste Management Limited என்ற புதிய நிறுவனம் தொடங்குவதற்கான இசைவாணையை தமிழக அரசு வழங்கக் கூடாது என்பதையும் நான் இந்த நேரத்தில் வலியுறுத்துவதோடு, அதற்கான உரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராம்கி எனர்ஜி மற்றும் என்விரான்மென்ட் லிமிடெட் நிறுவனமானது தமிழகம் முழுவதும் 11 இடங்களிலிருந்து மருத்துவக் கழிவுகளை எடுத்து, சுத்தம் செய்து, எரிக்கும் செயல்பாடுகளை நல்ல முறையில் நடைமுறைப்படுத்தி வருகிறது. மேலும், அந்த இடத்தில் எந்தவொரு சுகாதாரக் கேடும் ஏற்படவில்லை என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அந்த நிறுவனம் மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளது. அந்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது. வழக்கின் தீர்ப்பு கிடைத்த பின்னர் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பு, ஆய்வில் இருக்கிறது. கவன ஈர்ப்பு அலுவல் முடிந்து, இப்போது அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல் அலுவலுக்குச் சென்றுவிட்டேன். இப்பொழுது எழுந்திருந்து வாய்ப்பு கேட்கிறீர்களே! (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.